# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.7 நாள் 28.04.2026

| SC. No. | 35/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | நாகராஜ் | த/பெ. | சவுரிராஜன் |
| வயது | 48 | தொழில் | கொத்தனார் |
| கிராமம் | காடுவெட்டி | தாலுக்கா | சீர்காழி |

**(எதிரிகள் ஆஜர்).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் காடுவெட்டி, அண்ணன்பெருமாள் கோவிலில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் செல்வமுருகன், மதியழகன் ஆகியோரை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியும். எனக்கு இந்த வழக்கு குறித்து எந்த விபரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சி எனக்கூறி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :–

08.01.2024 அன்று மாலை 5.30 மணியளவில் எங்கள் ஊர் பேருந்து நிறுத்தத்தில் வந்து நின்ற TN 68N 0104 என்ற அரசு பேருந்து சீர்காழி செல்வதற்காக பேருந்து நிறுத்தத்தில் நின்றுக்கொண்டிருந்தேன் என்றும், அப்போது மேற்படி பேருந்து நிறுத்தத்தில் மேற்படி பேருந்திலிருந்து பயணிகள் இறங்கினார்கள் என்றால் சரியல்ல. அப்போது பேருந்தின் முன்புறம் சத்தம்கேட்டு சென்று பார்த்தபோது எங்கள் ஊரைச்சேர்ந்த பின்னால் பெயர், விலாசம் கேட்டுத்தெரிந்த ராஜேஷ், பிரவீன்குமார், ஸ்ரீராம் ஆகியோர்கள் அரசு பேருந்தின் ஓட்டுநரை அசிங்கமாக திட்டி அவரின் சட்டையை பிடித்து அடித்தார்கள் என்றும், மேலும், நடத்துனரையும் பிரவீன்குமார், ஸ்ரீராம் ஆகியோர்கள் அடித்தார்கள் என்றால் சரியல்ல. எதிரி

CJM, MAYILADUTHURAI.

S நாகராஜன்

பிரவீன்குமார் ஓட்டுநர் இருக்கைக்கு அருகில் இருந்த பக்கவாட்டு கண்ணாடியை உடைத்தார் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை நானும், எங்கள் தெருவைச்சேர்ந்த முத்துக்கிருஷ்ணனும் நேரடியாக பார்த்தோம் என்றால் சரியல்ல. என்னை போலீசார் விசாரித்தபோது மேற்படி சம்பவம் நேரடியாக தெரியம் என்று மேற்படி அரசு பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துனரை தாக்கி, அசிங்கமாக திட்டி பேருந்தின் கண்ணாடியை உடைத்தார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் தெரிந்தநபர்கள் என்பதால் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

இல்லை என முறையீடு செய்யப்பட்டது.

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

நாகராஜன்

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.8 நாள் 28.04.2026

| SC. No. | 35/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | அகோரமூர்த்தி | த/பெ. | செல்வம் |
| வயது | 33 | தொழில் | கொத்தனார் |
| கிராமம் | காடுவெட்டி | தாலுக்கா | சீர்காழி |

**( எதிரிகள் ஆஜர்).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் தற்போது காடுவெட்டி அண்ணன்பெருமாள்கோவிலில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்கிறேன். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். சுமார் 2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் எங்கள் ஊர் காடுவெட்டி பேருந்து நிறுத்தம் அருகே வைத்தீஸ்வரன் கோவில் போலீசார் விசாரித்து படம் வரைந்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–

பார்வை மகசரில் உள்ள கையொப்பத்தை எதற்காக போட்டேன் என்றால் மாரியம்மன் கோவிலில் திருட்டு நடந்தது சம்மந்தமாக மாரியம்மன் கோவிலில் வைத்து கையெழுத்து போட்டேன். பார்வை மகசரில் உள்ள விவரத்தை எதுவும் நான் படித்து பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. என்னுடன் யார் கையொப்பம் செய்தார்கள் என்ற விவரம் தெரியும் என்றால் தெரியாது.

மறு விசாரணை :–

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.